# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :27 July 2025

கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**
Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**
Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**
Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்
முனைவர்.அ.ரேவதி

தமிழர் மரபும் வாழ்வியலும்
பொ. அகத்திய பாலா

தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்
முனைவர் வ.மோகனப்பிரியா

பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி
வே.வெ.சுஜாதா

கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்
மேபல் சுபிதா த.

பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும்
கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்
ர.கிருஷ்ணவேணி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்**
சி.ஆர்த்தி

**தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை**
பி.தீபாவதி

**கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு**
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

**உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்**
ந.ஸ்டாலின்

**தமிழ்த் திரை இசைப் பாடல்கள்**
கார்த்திக் க

**நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்**
ஜென்சி வை கி

**இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்**
சே. வனிதா

**Historical And Archaeological Impact Of Palayarai**
Dr.S.Neelavathy

**Chola's Temples As A Social Organization**
A Study - S. Mala

**A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple**
M. Amirthavalli



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி



# தமிழ்

# தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை

*THENI SEERUDAIYAAN PUDHINANGALIL VELLIPPADDUM PENKALIN NILAI*

***Author: P.Deepavathi***

*Research Scholar,*

***Guide: Dr.R.Sumathi,***

*Associate Professor In Tamil,*

*Department Of Tamil,*

*Psg College Of Arts And Science,*

*Coimbatore-641014.*

***Abstract;***

*The message we have been hearing for ages is that God created women first. He created men later to protect the women who were created gently. How do the men who are supposed to protect women treat them in their lives? The purpose of this article is to show how women's lives are in this society.*

***Keywords:*** *Women. Feminism, Literature, Society. Education*

**கட்டுரையாளர்: பி.தீபாவதி**

முனைவர் பட்ட ஆய்வாளர்,

**நெறியாளர் :முனைவர்.இரா.சுமதி**

உதவி பேராசிரியர் (தமிழ்த்துறை)

பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி.

கோவை-641014.

**ஆய்வுசுருக்கம் :**

இறைவன் முதலில் பெண்களைப் படைத்தான்.மென்மையாகப் படைக்கப்பட்ட பெண்களைப் பாதுகாக்கவே பின்னர் ஆண்களைப் படைத்தான்.பெண்களைக் காக்க வேண்டிய ஆண்களே அவர்களை எவ்வாறு தங்களின் வாழ்க்கையில் நடத்துக்கிறார்கள் என்பது சமுதாயத்தின் பாட்பொருளாகிவிட்டது. இந்த சமுதாயத்தில் பெண்களின் நிலை எவ்வாறெல்லாம் உள்ளது என்பதனை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொல்:** பெண்கள்.பெண்ணியம், புதினம், சமுதாயம். கல்வி

**முன்னுரை:**

சமூதாயம் என்பது ஆண் ,பெண் என இருவேறுப்பட்ட ஆளுமைகளால் கட்டமைக்கப்பட்டது.ஒன்று மற்றொன்றிற்கு வேலை இருக்காது. ஒன்றைவிட்டு ஒன்றால் வாழவும் இயலாது.அப்படிப்பட்ட இவர்களை வேறுப்படுத்தி ஒருவர் மேலையும் மற்றொருவர் கீழேயும் பார்க்கக்கூடியக் காலக்கட்டமாக இந்த சமூதாயம் உருவாக்கப்பட்டுள்ளது.ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பதனால் ஒன்றைவிட ஒன்று உயர்ந்ததில்லை இருவரும் சமம்தான்.ஆனால் இச்சமூகமானது ஆண்களை ஒரு நிலையிலும் பெண்களை வேறொரு நிலையிலும் வைத்துக் காண்கின்றது.

**கற்பு:**

கற்பு இச்சொல்லானது சங்ககாலத்திலிருந்து இன்றுவரை பெண்களை மட்டுமே மையமாகக் கொண்டு அவர்களைச் சுற்றியே மையப்படுத்தும் ஒரு சொல்.பொதுவாகவே கற்பு என்றால் என்ன களவுக்கூட்டத்திற்குப்பின் தலைவன் தலைவியை விதிப்படி மணந்து இல்லறம் புரியு ஒழுக்கம் என்று க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி நமக்கு விளக்கம் தருகிறது.அஃதாவது காதல் வாழ்க்கைக்குபின் காதலித்த இருவரும் தங்களின் வாழ்க்கை பயணத்தை அடுத்த நிலைக்கு எடுத்து செல்லும் நிலையினை கற்பு என்கிறோம். ஒரு பெண் கணவனுடன் வாழ்தல் அல்லது கணவனை நீங்கி வேறு கணவனுடன் வாழலாம்.ஆனால் ஒரே நேரத்தில் பல ஆண்களுடன் வாழுதல் கூடாது என்கிறார் முனைவர்.அ.லட்சுமி தத்தை (கற்பு:ஆண்மொழி அரசியல்:ப:எண்:47). கற்பிற்கான விளக்கமானது அந்தந்த காலக்கட்டத்திற்கு ஏற்ப மாறும். சங்க காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்றிருந்தனர். அதற்கு பின்னர் கணவன் இறந்தால் பெண்ணுக்கு வேறு வாழ்க்கை இல்லை என்று தீயில் தள்ளிவிட்டும் காலமும் இருந்தது.90-களில் கணவன் இறப்பிற்குப்பின் மறுமணம் செய்து கற்பு வாழ்க்கையினை தொடரலாம் என்ற நிலைக்கு வந்தோம். இன்றளவும் இந்த முறையே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பெண் விரும்பினால் கணவனின் இறப்பிற்குப் பின்னோ அல்லது கணவனை முறைப்படி பிரிந்து வேறொரு வாழ்க்கையில் ஈடுபடும் நிலை உள்ளது.ஆனால் கற்பு வாழ்க்கை ஆணோ பெண்ணோ இவரும் "பிறன் நெஞ்சு புகாமை" என்ற கொள்கையினைப் பின்பற்றுவதே கற்பு ஒழுக்கத்தின் உண்மை பொருள் ஆகும்.

**திருமணம்:**

கற்பு வாழ்க்கையினையே திருமணம் என்னும் பெயரால் குறிப்பிடுகிறோம்.திருமணம் என்பது இரு மனங்கள் இணைவது மட்டுமல்ல.இரண்டு குடும்பங்களின் இணைப்பு .ஒருவரின் வாழ்வினை மாற்றும் வல்லமை படைத்தது தான் திருமணம். ஆண் தனது பொறுப்பினை உணரும் தருணம் அது. பெண் தனக்கு பழக்கமே இல்லாத புது சூழலுக்கு தன்னை உட்படுத்திக் கொள்ளும் தருணம் அது. அதனால் ஆண்,பெண் இருவருக்குமே இது ஒரு புதுமையான

தங்களின் வாழ்க்கையினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் நிகழ்வு.மணம் என்றால் 'கூடுதல்' என்பது பொருள். மணம் என்றால் நறுமணத்தை குறிக்கும்.ஒருவரின் வாழ்வின் புதுமணம் வீசப்போகிறது என்பதனை குறிப்பாக இச்சொல் நமக்கு உணர்த்துகிறது.'திரு' என்றால் மரியாதை நிமித்தமாக குறிப்பிடப்படும் சொல். எனவே திருமணம் என்பது ஆணும் பெண்ணும் இருவரின் வாழ்வில் இல்லறம் என்ற மரியாதையான கண்ணியமான மணம் ஒன்று வீசி வசந்தம் அடையச் செய்யப் போகின்றது எனலாம்.

பொதுவாகவே திருமணம் என்பதனை இருவகைப்படுத்தலாம்.ஒன்று *1.*காதல் திருமணம் *2.*நிச்சயிக்கப்பட்ட திருமணம்.காதல் திருமணம் என்றால் ஆணோ பெண்ணோ ஒருவரை ஒருவர் முன்பே அறிந்து பழகி பல எதிர்ப்புகளை கடந்து பெற்றோர்களை சம்மதிக்க வைத்து செய்யும் திருமணம். நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் பெற்றோர்களாகப் பார்த்து அவரவரின் குடும்ப சூழலுக்கு ஏற்றாற்போல தனது மகனுக்கோ அல்லது மகளுக்கோ திருமணம் செய்து வைப்பர். இதில் ஆண்ணோ பெண்ணோ முன்பே பரிட்சையமில்லாதவர்களாக இருப்பர்.இல்லையேல் ஒருவரை ஒருவர் தெரிந்தும் நன்கு பழக்கமில்லாதவர்களாக இருப்பர்.

**பெண் பார்த்தல்:**

நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்பதே பெற்றோர்களுக்கு மிக முக்கியமான பொறுப்பு.பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு ஏற்றாற்போல வாழ்க்கை துணையினை அமைத்துக் கொடுப்பது.திருமணத்தில் முக்கியப் பங்கினை வகிப்பதே இந்த பெண் பார்த்தல் முறைதான்.அப்படி மகனுக்கு ஏற்றப் பெண்ணைத் தேடுவதையே ஒரு கட்டுப்பாட்டுக்குள் பெற்றோர் உட்படுத்துவர்.மகனுக்கு எவ்வளவு குறை,நிறைகள் இருந்தாலும் பார்க்கும் பெண்ணை எந்த ஒரு குறையும் இல்லாமல் குறிப்பிட்ட வயதிற்குள் பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் பெற்றோர்க்கு இருக்கும் அதனை

"வயது இருபத்தியெழைத் தாண்டிவிட்டது. ஒருத்தியைக் கண்டுபிடித்தாக வேண்டும்.விளக்கேற்ற ஒரு நல்ல கை நீண்டு விரிந்து வரவேண்டும்"(ஒற்றை வாசம்:ப:எண்:***136)***

"ஒற்றை வாசம்" என்ற புதினத்திலும் சுகந்தனின் தாய் வயதானதும் அவனுக்கு பெண் தேட ஆரம்பித்தாள்.ஜோதி என்ற பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தனர்.பின் வேறு இடத்திலும் சென்று வேறொரு பெண்ணை பார்க்கின்றனர்.அதற்கு பெற்றோர் கூறிய காரணம்

"முருங்கக்குச்சியக் கொண்டு வாரதுக்கு இது பரவால்ல"(ஒற்றை வாசம்:ப:எண்:***113)***

பெண்ணைப் பார்த்துவிட்டு வந்து அந்த பெண்ணையே கேலி செய்வது தவறு.அந்த ஆணிற்கு இந்த பெண் பத்தில் ஒருந்தியாக இருக்கலாம். ஆனால் ஒரு பெண்ணிற்கு அப்படியல்ல ஆயிரம் ஆசைக் கனவுகள் மனதிற்குள் நிறைந்திருக்கும்.வேறு இடத்தில் சென்ற பார்த்த பெண்ணையும் சபையில் வைத்து சுகந்தனின் அக்கா,

"இதே மாதிரி இன்னொரு இயற்கையாக செஞ்சுவச்ச ஆம்பள வருவாங்; அவங்கூடப் போயி படுக்கட்டும்;எந்தம்பி கருப்பு வைரம் இவளோட சோடி சேர்ந்து வீதியில நடக்க முடியுமா?"(ஒ.வ:ப:எண்:136)

என்று கூறுகிறாள். அவளும் ஒரு பெண்தான் இன்னொரு பெண்ணைப் பற்றி இப்படி சபையில் இப்படி கூறினால் பெண்ணைப் பெற்றவர்களின் மனம் எவ்வளவு வேதனை அடையும்.ஒரு ஆண் பெண் வீட்டுற்கே சென்று அவர்கள் தரும் பலக்காரங்களையும் உண்டுவிட்டு அந்த பெண்ணையே முகம் பெரிதாக உள்ளது.கண் சிறியதாக உள்ளது.குட்டை மேனியுடையவளாய் இருக்கிறாள் போன்ற விமர்சனங்களைக் கூறி நிராகரித்துவிட்டு வருகின்றனர்.பெண்ணைப் பெற்றவர்களால் தன் வீட்டிற்கே வந்து இப்படி ஏளனம் செய்கிறவர்களை ஒன்றும் சொல்ல இயலவில்லை.

**சீர்வரிசை:**

பெண் பார்த்துவிட்டு பெண் பிடித்துவிட்டது என்றால் உடனடியாக பெரியவர்களின் வாயில் நுழையும் சொல் சீர்,வரிசை.அதாவது எவ்வளவு போடுவீங்க,என்ன செய்வீங்க,இதனையெல்லாம் நாங்க எதிர்பார்க்கிறோம்.இதனைதான் நாம் வரதட்சனை என்ற மற்றொரு பெயரினைக் கொண்டு குறிக்கிறோம். பெண் பார்க்க செல்லும் போதே வரதட்சனையை முடிவு செய்துவிட்டுதான் கல்யாணப் பேச்சையே தொடங்குவர். குடும்பம் நிம்மதியாக இருக்குமா என்றெல்லாம் பெற்றோர்கள் யோசிக்காமல்.பொன்னை மட்டுமே பிரதானமாக வைத்து கல்யாணத்தை முடிவு செய்கின்றனர்.ஆணின் விருப்பத்திற்கோ பெண்ணின் விருப்பத்திற்கோ இங்கு இடமில்லை.இதற்கு பொருத்தமான நிகழ்வாக'ஒற்றை வாசம்' புதினத்தில்

"விடு திங்கய உங்கக் குடுத்துத் தேத்திரலாம்.நீ ஓழக்கிற
ஒடம்புக்காறேங்.ஆறு மாசத்தில் கூடி ஒருநா போயி ஓஞ்சு சாஞ்சு
ஒக்காரணும்னாங்கூட ஒர்ச்சான் எடம் இருக்கா.ரெண்டு பவுனுக்கும் வக்கில்ல போலருக்கு"(ஒற்றை வாசம்.ப.எண்:40)

என்று சுகந்தனின் அம்மா ஜோதியின் குடும்ப நிலையினை சுட்டிக்காட்டுகிறார்.ஜோதியின் குணம் இங்கு தெரியவில்லை.பவுன் மட்டுமே பிரதானமாக நின்றது. பிழைப்பவர்கள் எங்க இருந்தாலும் பிழைப்பர்.வெறும் பொன் என்ற பெயரில் கொண்டு வரும் சீர்வரிசை மூலம்தான் பிழைக்க வேண்டுமென்றால்,ஆணின் உழைப்பிற்க்கு எந்த மரியாதையும் நம்பிக்கையும் இல்லாமல் போய்விடுகிறது.

ஜோதியின் தோழி சாந்தி தனது நிறத்தின் குறையால் திருமணம் செய்ய தயங்குவதாக 'ஒற்றை வாசம்' புதினம் நமக்கு காட்டுகின்றது.

"நீங்களாச்சும் செவத்த தோல்காரிக; போட்டாலும் போட்டாட்டியும் மின்னுவீக;நா கருங்கட்ட;நெறையாப் போட்டாத்தே ஜொலிக்குமாம்"

(ஒற்றை வாசம்.ப.எண்:**147)**

என்று தனது குடும்பத்தில் சாந்தியை பற்றிய நிலையை அவள் கூறுகிறார்.நிறத்தையும் உடற்பருமனையும் அடிப்படையாகக் கொண்டும் வரதட்சனை கேட்கப்படுகிறது என்பதனை சாந்தியின் நிலை நமக்கு உணர்த்துகின்றது.

**பெண்ணின் தயக்கம்:**

சீர் வரிசை இல்லாமல் பெற்றோர்கள் ஏற்றுக் கொண்டாலும்.பெண்ணிற்கு ஒரு சிறு தயக்கம் எப்போதுமே இருக்கிறது.ஏனென்றால் ஏதோ ஒரு சூழலில் தன்னை இதனை காரணமாகக் காட்டி பேசிவிட்டாள் என்ன செய்ய முடியும் என்ற எண்ணம்.ஜோதிக்கு அப்படியான ஒரு எண்ணமே மனசில் ஓடிக் கொண்டு இருந்தது.இதனை,

"மக கெட்டிக்காரப்புள்ள;சங்கலி சரப்பிலி இல்லாம எப்படி

இன்னொரு வீட்டுக்குள்ளே நொழையிறதுன்னு கவலப்படுது"

(ஒற்றை வாசம்.ப.எண்:28)

என்று ஜோதியின் கவலையினை 'ஒற்றை வாசம்' புதினம் நமக்கு காட்டுகிறது.

**சுற்றத்தாரின் துணை:**

பெண்ணிற்கு திருமணத்தின் மீதான பயமோ தயக்கமோ ஏற்படும் போது நம்மை சுற்றியுள்ளவர்கள் உறவினராகவோ அல்லது தெரிந்தவர்களாகவோ இருந்து நமக்கு வழிகாட்டுவர்.அதேபோல்தான் ஜோதியை பெண் பார்க்க வரும்போது பெரியம்மா ஜோதியிடம் சென்று,

"ஒங்கப்பே இந்த சென்மத்துல ஒனக்கு வீடு கூட்டாது**;**அடுப்பங்கரையிலேயே போட்டு வருத்தெடுத்துரும்**;**கூலிக்காரவுகதேன்னாலும் பவுரான குடும்பம் வீட்டு நெலவரந்தெரிஞ்சவ நீ"(ஒற்றை வாசம்.ப.எண்:**87)**

என்று அவளின் வீட்டு நிலைமையினைக் கூறி திருமணத்திற்கு தயாராக்குகின்றனர்.

குடும்பத்தில் தலைவன் சரியில்லையென்றாலோ குடும்ப நிலைமை சரியில்லையென்றாலோ அதனை சரி செய்ய சுற்றத்தார் கண்டிப்பாக இருப்பர்.அது நன்மையானாலும் சரி தீமையானலும் சரி.இதனை 'ஒற்றை வாசம்' புதினம் ஜோதியின் தந்தைமூலம் நமக்கு காட்டுகின்றது,

**குடும்ப அமைப்பு:**

பிரபஞ்சத்தில் வாழும் மனிதர்கள் அனைவருக்கும் குடும்பம் என்பது மிகப் பெரிய சக்தியாக விளங்குகிறது.சில மனிதர்களுக்கு குடும்பமே வரமாகவும் இன்னும் சிலருக்கு அதுவே சாபமாகவும் அமைந்துவிடுகின்றது.குடும்ப அமைப்பை இங்கு நாம் இரண்டாகப் பிரிக்கலாம்.ஒன்று பெண் வழிநடத்தும் குடும்பம்.மற்றொன்று ஆண் வழிநடத்து குடும்பம் ஆகும்.

**பெண் வழிநடத்தும் குடும்பம்:**

பெண்களால் வழிநடத்தப்படும் குடும்பம் என்பது ஆணிண் துணை இருக்கும்.ஆனால் ஆண் என்பது வெறும் பெயரளவில் மட்டுமே காணப்படும்.பெண் என்பவளே பிரதானமாகக் குடும்பத்தை வழிநடத்துவாள். கணவன் என்னதான் பல இடயூறுகளைக் கொடுத்தாலும் ,வீட்டு செலவிற்கு பணம் கொடுத்தும்,கொடுக்காவிட்டாலும் அவளே தன்னிடம் இருக்கும் காசை வைத்து குடும்பத்தை வழிநடத்துவாள்.இதனை 'ஒற்றை வாசம்' நமக்கு காட்டும்,

"தன் உழைப்பில் தன்னையும் குழந்தைகளையும் காப்பாத்தி வருகிறாள்"(ஒ.வா.ப.எண்:243) பாண்டியம்மாளின் கணவன் வீட்டிற்கு பணம் தராமல் தானே வைத்துக் கொள்வாள்.அதனால் தன்னையும் குழந்தைகளையும் பாண்டியம்மாள் புளித்தட்டிக் கிடைக்கும் பணத்தில் காப்பாற்றும் நிலை உள்ளது.

பெண் தனது குடும்பம் என்று மட்டுமில்லாமல் பிறந்த வீட்டிற்கு ஏதேனும் செலவு செய்வது என்றாலும் பிறந்த வீட்டிற்காகவும் துணை நிற்கிறாள்.அதனை

"நான் சின்னவனாய் இருந்த போது தனக்குக் கிடைக்கும் காசை

எனக்காச் செலவழித்தாள்;இன்றும் அந்த அன்பு அப்படியே இருந்தது"(ஒ.வா.ப.எண்:171)

என்று சுகந்தனின் அக்கா அவனின் கல்யாணத்திற்கான செலவினைத் தன் கணவனுக்கு தெரியாமல் செய்ய முற்படுகிறாள்.புகுந்தவீட்டின் நன்மைக்கு மட்டும் என்றில்லாமல் பிறந்தவீட்டிற்கு ஒரு கஷ்டம் என்றாலும் துணை நிற்கின்றாள் பெண்.

**ஆண் வழி நடத்தும் முறை:**

பெண் என்பவள் குடும்பத்திற்கு எப்படி முக்கியமோ ஒரு ஆணும் அந்த அளவிற்கு முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். நிறைய ஆண்கள் பெண் இல்லையேல் மறுமணம் செய்து கொண்டும் குடித்தும் குடும்பத்தை நன்றாக கவனிக்க மறந்தவர்களாக இருப்பர்.ஆனால் இவர்களுள் சிலர் குடும்பத்திற்காக வாழும் ஆண்களாக இருப்பர்.அவர்களைப் பற்றி 'ஒற்றை வாசம்' என்னும் புதினத்தில் தேனி சீருடையான் வெளிப்படுத்தியிருப்பார்.

"எள வயசுலேயே தொணை எழந்து புள்ளைகளே கெதின்னு கெடக்காரு;தொத்தக் கடய வச்சுக்கிட்டு;ரெண்டு பயகள வேத்தூருல பண்ணயத்துக்கு விட்டுட்டு பொட்டைகள எறும்பு கடிக்படாம,வேத்துக் கண் படாம காவக் காத்துக்கிட்டிருக்காரு"(ஒற்றை வாசம்.ப.எண்:25)

பெண் இறந்த மூன்று மாதங்களிலேயே மறுமணம் செய்து கொள்ளும் ஆண்கள் உண்டு.அவர்களுக்கு மத்தியில் மனைவி முப்பது வயதில் நோய் அண்டி இறந்து போக மூன்று மகன்கள் இரண்டு மகளை வைத்து கஷ்டப்பட்டு வளர்கிறார் ஜோதியின் தந்தை.

**பிள்ளைப்பேறு:**

திருமணத்திற்கு பிறகு ஒரு பெண் முழுமை அடைகிறார் என்றால் அது தாய்மையின் மூலம் தான். பெண்மைக்கு அழகு குழந்தையை ஈன்றெடுத்து அதனை நல்ல முறையில் வளர்ப்பது ஆகும்.அந்த பேறு ஒரு பெண்ணுக்கு கிடைத்துவிட்டால் அதைவிட பெறும் மகிழ்ச்சி எதுவும் இல்லை. ஆனால் அது வேறுபடும் நிலையில் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் வலி என்பது வாழ்விலும் சரி மனதளவிலும் சரி அவள் தாங்கிக் கொள்ள முடியாத வேதனையை ஏற்படுத்தும்.ஆணுக்கும் இந்த வலியும் வேதனையும் இருக்கும்.ஆனால் உலகமும் சுற்றியிருப்பவர்களும் தூற்றுவது பெண்ணை மட்டும்தான்.இந்த நிலையினை ராக்கம்மா என்ற பாத்திரத்தின் மூலம் 'வேப்பங்கிணறு' என்ற புதினத்தில் நமக்கு பிள்ளைப்பேறு இல்லையென்றால் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று காட்டுகின்றார் தேனி சீருடையான்,

"ராகம்மாவுக்கு சலிப்பு உண்டானது.விரக்தியடைந்த மனோநிலையில் வாழ்க்கையை நகர்த்தினாள்.எதையோ பறிகொடுத்தவளைப் போல
நிறைவின்றித் திரிந்தாள்"(வேப்பங்கிணறு.ப.எண்:**294)**

எவ்வளவு வசதியுடன் அனைவரும் வியக்கும்படி வாழ்ந்த இராகம்மாவிற்கு பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்தது.

பெண்ணின் வலியை இன்னொரு பெண் அறிவாள் என்பர். ஆனால் குழந்தைபேற்றினைப் பொருத்தவரை பெண்களே பெண்களுக்கு முதல் எதிரியாக இருப்பர்.குழந்தைப்பேறு என்பது பெண்ணிற்கு முக்கியம்தான் ஆனால் அந்த ஒன்று மட்டுமே அவளின் வாழ்க்கையினையும் குணத்தையும் தீர்மானிப்பது கிடையாது என்று பலரும் புரிந்துக் கொள்ளவேண்டும்.

**தாய்மையின் சிறப்பு:**

குழந்தையினைப் பெற்று வளர்ப்பதில் ஆணும் பெண்ணும் சமமான பங்கு வகிக்க வேண்டும்.ஆனால் தாய்க்கு ஒருபடி மேலாகவே பொறுப்புக் கொடுக்கப்படும்.குழந்தைக்கு ஏற்படும் நன்மை தீமை இரண்டிலுமே தாய்க்கு முக்கிய பங்கு உண்டு.அப்படியாக ஒரு குழந்தையினைப் பெற்றெடுக்கும் தாயின் அந்த பூரிப்பும் தான் ஒரு கருவை சுமக்கின்றோம் என்ற பெருமிதம் எப்படி இருக்கும் என்பதனை ஜோதி நமக்கு விளக்குகிறாள்.

"புளித்தட்டப் போன இடத்தில் சரியாய்த் தரையில் உட்கார முடியாதவளாய் பெருமிதமாய் ஏற்றுக்கொண்டு 'பாடாப் படுத்தது' என்றாள்.இரவுத் தூய்ப்பில் குழந்தை உதைப்பதைத் தொட்டுக் காட்டினாள்"(ஒற்றை வாசம்.ப.எண்:220)

நான்கு ஆண்டுகள் திருமணமாகியும் கருத்தரிக்காத நிலையில் அவளின் ஏக்கம் ஒரு நாள் மாறியது. குழந்தைப் பேற்றினை அடைகிறாள்.அதனை அவள் எவ்வளவு அழகாக இரசிக்கின்றாள் என்பதனை 'ஒற்றை வாசம்' புதினத்தின் மூலம் அறியலாம்.

**பெண் அடிமை:**

திருமணமான உடன் பெண்களைப் புகுந்த வீட்டிற்கு தங்களுக்காக விற்றுவிட்டதாக ஆண்கள் நினைப்பர் போலும். அவர்களின் எல்லாப் பணியையும் பெண்களைச் செய்வர்.தனக்காக ஒரு பெண் பிறந்து வளர்ந்த வீட்டைவிட்டு பழகிய மனிதர்களைவிட்டு ஒரு ஆணையும் அவர்களின் வீட்டாரையும் நம்பித்தான் செல்கிறாள். ஆனால் அவர்கள் தங்களுக்கு வேலை செய்ய ஒரு அடிமை சிக்கிக் கொண்டாள் என்று எண்ணுவர் போல.இதனை 'நிறங்களின் உலகம்' ,

"எங்கூடப் படுக்குறதுக்கு மட்டும்தான் பகவான் அவளப் படச்சுவிட்டிருக்கான்;கஞ்சி இருந்தாக் குடிக்யணும்;இல்லையன்னா ஈரச் சீலைய இறுக்கிக் கட்டிக்கிட்டு வீட்டு மூலைல படுத்துக் கெடக்கணும்;என்னயக் கேள்வி கேக்க இவ யாரு?"(நி.உ.ப.எண்:**138)**

என்று பெண் திருமணமாகி வருவதே ஆணுடன் உறவுக் கொள்ளுவதற்கு மட்டும்தான் என்றும் தன்னை நம்பிவந்தவளுக்கு ஒழுங்காக சோறுக்கூடப் போட முடியாத நிலையையும். அதனை பெண் தைரியமாகக் கேள்விக் கேட்டால் அவளை அடிப்பது என்று பெண் தனக்கான உரிமையினைக் கூட கேட்கவிடாமல் அவளை கணவன் அடிமையாக நடத்துகிறான்.

இவ்வளவு தூரம் ஒரு பெண்ணை அடிமைப்படுத்தினாலும்.அவளின் மனமானது.அந்த ஆணை ஒரு போதும் விட்டுக் கொடுக்காது.அதனை,

"பெறவியே அப்பிடித்தான் அவுக அடிக்யவும் செய்வாக;
அணக்யவும் செய்வாக;அவுக ரொம்ப நல்லவுக வள்ளி"(நி.உ.ப.எண்:**78)**

பாண்டியின் தாய் பக்கத்துவீட்டு வள்ளியிடம் தனது கணவனை விட்டுக்கொடுக்காமல் கூறுவதனைப் பார்க்கும்பொழுது நம்மளுக்கு அவர்களை விட்டுக்கொடுக்காதவர்களாக பெண்கள் இருக்கின்றனர்.

**இல்லறப்பணியில் சிக்கல்கள்:**

இல்லறத்தினை நன்றாக நடத்த கணவன் மற்றும் மனைவி இருவரும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும். இவ்விருவரில் ஒருவர் தங்களின் கடமையினை சரிவரச் செய்யவில்லை என்றாலும் அது இல்லறத்தினைப் பாதிக்கும்.தன்னுடைய இன்பம் மட்டுமே பெரிது என்று எண்ணி இருந்தால் அது குழந்தை மற்றும் மனைவியினைப் பாதிக்கும்.இதனை 'கடை' புதினமானது நமக்கு காட்டுகின்றது,

"பச்ச மண்ணுக்குக்கூட ரெண்டுதராம,அம்புட்டையும் நீயே
அரக்கிறியே,நீயெல்லாம் ஒரு ஆம்பள தானா?"(கடை.ப.எண்:**108)**

சிறுகுழந்தைகள் பார்த்திருக்க தான்மட்டும் உண்டால் போதும் என்று பழங்களை வாங்கி சாப்பிடுகிறான்.தனக்கு சாப்பிடத் தோன்றுவது போல தன்னுடைய பிள்ளைகளுக்கும் தோன்றும் என்ற நினைப்பு இல்லாதவனாய் இருக்கிறான்.

**மறுமணம்:**

மறுமணம் என்பது முன்பெல்லாம் ஆண்கள்தான் பெரும்பாலும் செய்துக் கொண்டனர்.இரண்டிற்கும் மேற்ப்பட்ட திருமணங்களைச் செய்தனர் என்று நாம் சங்க கால ராஜாக்களில் இருந்து படித்து வருகிறோம்.காலப்போக்கில் அது மாற்றம் அடைந்து ஆண் மனைவி இருக்கும் பொழுதே வேறொருப் பெண்ணை ஆசையின் பொருட்டு திருமணம் செய்யத் தொடங்கினர்.சட்டங்கள் எல்லாம் கொண்டு வந்த பிறகு உரிய காரணங்களைக் கூறி பெண்ணை விவாகரத்து செய்து பின்னோ அல்லது மனைவியின் எந்த வித எதிர்ப்பும் இன்றி மறுமணம் செய்யத் தொடங்கினான்.ஆனால் இன்றௌவும் மனைவி இறந்தபின் மறுமணம் செய்து கொள்ளும் முறையும்,மனைவிக்கு தாய்மைப் பேறு இல்லை என்றால் மறுமணம் செய்யும் முறையும் உள்ளது.குறை ஆணிற்கா பெண்ணிற்கா என்று கூட பரிசோதிக்காமல் குழந்தையில்லை என்றால்.உடனே ஆணிற்கு மறுமணம் செய்ய முற்படுகின்றனர்.மறுமணம் செய்ய குழந்தை இல்லை என்பதனை காரணம் காட்டும் ஆண்கள்தான் மனைவி இறந்தபின் அந்த குழந்தையினைப் பார்த்துக் கொள்ள மறுமணம் செய்கின்றான்.இந்நிலையையும் ,'ஒற்றை வாசம்' என்ற புதினம் நமக்கு காட்டுகின்றது.

"சேட்டமில்லாமப் படுத்துக்கிடும் போது தண்ணி
வச்சுத்தரவாவது ஆளு வேணுமில்ல"(ஒற்றை வாசம்.ப.எண்:**85)**

இதில் ஐப்பத்தைந்து வயதில்,மனைவி இறந்தபின் பெண்பிள்ளைகள் இருக்க இளம்வயது பெண்ணை மறுமணம் செய்துக் கொண்டார்.அதற்கு அவர் கூறிய காரணம்,கை,கால் அமுக்க உடம்பு சரியில்லை என்றால் பார்த்துக் கொள்ள என்பதுதான்.பெண்ணின் மனநிலையைக் கூட புரிந்துக் கொள்ளாமல்,அவளை தனது சுகத்திற்காகத் திருமணம் செய்துக் கொள்ளும் இதுபோன்ற நிலை கொடுமையானது.

**உடன்போக்கு:**

களவு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த தலைவனும் தலைவியும் கற்பு வாழ்க்கையினைத் மேற்கொள்ள பெற்றோர்களின் சம்மதமின்றி செல்லுதலே "கொண்டுதலைக் கழிதல்" என்கிறார் தொல்காப்பியர். இதனையே காலப்போக்கில் தலைவனுடன் செல்லுதல் என்பதனை "உடன்போக்கு" என்றனர்.இன்று நாம் இதனை "ஓடிப்போதல்" என்ற சொல்லினால் இன்றளவும் சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.உடன்போக்கினை ஆண்,பெண் அல்லது சுற்றியிருப்பவர்கள் என யார் தூண்டுதலால் செய்தாலும் சரி "ஓடுகாலி" என்ற பட்டம் பெறுவது பெண்தான்.ஆணை எந்த ஒரு சொல்லினாலும் வசவுப்பாடுவது இல்லை.இவர்களுக்கு இப்படி ஒரு பட்டத்தினைக் கொடுப்பதற்கு முன்னால் அந்த பெண் ஏன் இவ்வாறு செய்தால் என்று யாருமே வினவுவதுமில்லை.பெற்றோர்கள் தங்களின் திருமணத்திற்கு சம்மதிக்கமாட்டனர் என்று போராடி துவண்டு போன நிலையில்தான் இந்த மாதிரியான முடிவுகள் எடுக்கப்படுகின்றனர்.

பெண்ணிற்கு எப்படியான நெருக்கடி ஏற்பட்டால் அவள் இந்த மாதிரியான செயலில் ஈடுபடுவாள் என்பதனை 'நாகராணியின் முற்றம்' புதினம் நமக்கு காட்டுகின்றது.

"நான் கட்டுனா சந்திரனத்தான் கட்டுவேன்;இல்லாட்டி முண்டக்கட்டைய இருந்துட்டுப் போறேன்"(நா.மு.ப.எண்:**292)**

மேற்கூறிய வரிகளில் நாகராணி தன்னுடைய பெற்றோரை தன்னால் இயன்றவரை போராடும் நிலையினைக் குறிக்கின்றது.

பெற்றோரின் எதிர்ப்பினால் உடன்போக்கு மேற்கொள்கின்றனர். ஆனால் இன்னும் சிலர் பெற்றோர்களை நம்பினால் தனக்கு திருமணமே நடக்காது என்ற நிலையில் இந்த முடிவினை எடுக்கின்றனர்.தாயில்லாமல் பொறுப்பில்லாத தந்தை, தமையன்கள் தனக்கு எப்படி திருமணம் செய்து வைப்பர் என்ற பயத்தில் 'ஒற்றை வாசத்தில்' ஜோதியின் தங்கை,

"எனக்கு கல்யாணம் ஆகும் என்ற நம்பிக்கை பொய்த்துப் போனது.

அம்மாவின் நகைகளும் கடைக்கான முதலீடும் தீர்ந்து போய் அல்லாடிக் கொண்டிருக்கும் அவரால் என்னைக் கரை சேர்க்க முடியாது என்பதை சுட்டிக் காட்டிக் கொண்டே இருந்தார் பூக்காரம்மா"(ஒ.வா.ப.எண்:**248)**

தனது தந்தையின் பொறுப்பற்ற நிலையினால் தனக்கு எங்கு திருமணம் நடக்காமல் இப்படியே இருந்துவிடுவோமோ என்ற பயத்தினால் சுவாதி மாரியப்பனைக் காதலித்து அவனுடன் சென்றுவிடுகிறாள். எனவே நாம் எளிமையாக ஒரு பெண்ணை சாடி விடுகிறோம்.ஆனால் அவளின் சூழ்நிலையினையவரும் புரிந்துக்கொள்ளவதும்மில்லை.அதற்கு முயற்சிசெய்வதும் இல்லை என்பதனை நாகராணி மற்றும் சுவாதி நமக்கு புரியவைக்கின்றனர்.

**முடிவுரை:**

பெண் என்பவள் என்ன தான் தனக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று கூறினாலும் இன்னும் பெண்ணினுடைய கற்பு வாழ்க்கையில் அவளுடைய விருப்பமானது நிராகரிக்கப்பட்டே வருகிறது.

பெண் என்பவள் மென்னமையானவள் என்று கூறும் ஆண்கள் தான் அவளை பெரிதும் காயப்படுத்துகின்றனர்.நாம் இருபதாம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்தாலும் எங்கோ சில இடங்கள் இன்றளவும் பெண்ணிற்கான விருப்பு வெறுப்பு உணர்வுகள் நிராகரிக்கப்பட்டுதான் வருகின்றது.தொழில்நுட்பத்திலும் அறிவியலிலும் பெண்கள் தேர்ச்சி பெற்று வெளியூர் சென்று தன்னுடைய திறமைகளை காட்டி பெருமை செய்கின்றனர்.ஆனால் வீட்டில் தனது வாழ்க்கைக்காக அவளால் போராடி வெற்றிப்பெற இயலாத நிலையில் உள்ளனர்.

**துணை நின்ற நூலகள்:**

*1. தேனி சீருடையான் - நாகராணியின் முற்றம் ,அன்னம், மனை எண் 1,நிர்மலா நகர், தஞ்சாவூர்-613 007. மு.பதிப்பு:2017.*

*2. தேனி சீருடையான் — கடை -அகரம், மனை எண் 1,நிர்மலா நகர், தஞ்சாவூர்-613 007. மு.பதிப்பு:2008,இ.பதிப்பு:2015*

*3. தேனி சீருடையான் - வேப்பங்கிணறு - அன்னம், மனை எண் 1,நிர்மலா நகர், தஞ்சாவூர்-613 007. 2021.*

*4. இரா.பிரேமா — பெண்ணியம்- தமிழ்ப்புத்திகாலயம், 8,மாசிலாமணித் தெரு, தி.நகர், சென்னை-600017. 2002.*

*5. இராஜம் கிருஷ்ணன் - காலந்தோறும் பெண் - நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, ஏ-5,கிரீன் பார்க், புதுடில்லி-110016. 1994.*

***Reference:***

*1. Theni Seerudaiyaan - Nagaraniyin mutram, Annam,No:1, Nirmala nagar, Thanjavur — 613007.*

*2. Theni Seerudaiyaan — Kadai, Annam,No:1, Nirmala nagar, Thanjavur — 613007.*

*3. Theni Seerudaiyaan - Vepangkinaru, Annam,No:1, Nirmala nagar, Thanjavur — 613007.*

*4. K.Prema - Penniyam, Tamil puththagaalayam, 8, Masilamani street, T.nagar,Chennai-600017.*

*5. Rajam Krishnan — Kaalanthorum Pengal,National Book Trust India, A-5 Green Park, New Delhi — 110016.1994*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com